**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF
Calender :
Miscellaneous : CC Case No.59/2021
Preliminary Register :
Sessions : **P.W.1**

Deposition of witness for: Prosecution / Defence / Court

Name : திரு. சாந்தகுமார்
Husband/Father Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 21.06.2022.

முதல் விசாரணை:–

நான் பூலாங்குளம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். உள்ளூர்க்காரர்கள். எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் தேர்தல் சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது. எங்கள் ஊர் பஞ்சாயத்து தேர்தலில் இருமுறை நாங்கள் தான் வெற்றி பெற்று தலைவராக இருந்து வருகிறோம். எனது அண்ணி அனந்தம்மாள் பஞ்சாயத்து தலைவராக இருந்து வருகிறார். கடந்த 05.02.2021 ம் தேதி எனது அண்ணியை தரக்கம்பால் விஜயகுமார் என்பவர் குத்த வந்தார். அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்தார்கள். போலீசார் அந்த வழக்கில் விஜயகுமாரை கைது செய்து சிறையில் அடைத்தார்கள். பின்னர் ஜாமீனில் வந்த அவர் 14.01.2021 ம் தேதி காலை 9 மணியளவில் எனது வீட்டின் முன்பாக நான் இருந்தபோது என்னை வெளியில் வரச்சொல்லி விஜயகுமார், சாந்தகுமார், ராஜ், பஞ்சவர்ணம், ஜோசப் ஆகியோர் அழைத்தார்கள். சாட்சி மீண்டும் சொல்கிறார் முதல் சம்பவ தேதியானது 14.01.2021 ம் தேதி என்று சொல்கிறார். நான் வெளியில் வந்தேன். என்னை விஜயகுமார் என்பவர் வழக்கு போட்டு எப்படி நீ உள்ளே தள்ளுவாய் என்று சொல்லி கம்பியால் என்னை அடித்தார். நான் கையால் தடுத்தபோது இடது கை மணிக்கட்டுக்கு மேல் காயம் ஏற்பட்டது. சாந்தகுமார் கம்பால் எனது பின்னந்தலையில் அடித்தார். நான் கீழே விழுந்துவிட்டேன். ஜோசப், ராஜ், பஞ்சவர்ணம் ஆகியோர்கள் கம்பாலும்

கையாலும் என்னை அடித்தார்கள். எங்கள் வீட்டு கொட்டகை அருகில் உட்கார்ந்திருந்த சத்தியா, கனகராஜ், பாண்டியம்மாள் ஆகியோர் வந்து எதிரிகளை சத்தம் போட்டு அனுப்பிவைத்தார்கள். பின்னர் காயம்பட்ட என்னை கடலாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். நான் கடலாடி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று விட்டு மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமணையில் இருந்தபோது போலீசார் வந்தார்கள் நான் நடந்த சம்பவத்திற்கு புகார் கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. என்னை சம்பவம் குறித்து போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

நான் பி.டெக் தகவல் தொழில்நுட்பம் படித்துள்ளேன். வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படுகின்ற இடத்தில் சம்பவ நேரத்தில் என்னையும் எதிரிகளையும் தவிர வேறு யாரும் இல்லை. சம்பவம் நடந்தவுடன் நான் காவல்நிலையம் செல்லவில்லை. கடலாடி மருத்துவமனைக்குதான் சென்றேன். சம்பவம் நடைபெற்ற சமயத்திலிருந்து 45 நிமிடத்தில் நான் கடலாடி அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். நான் கடலாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் 15 நிமிடங்கள் இருந்தேன். சம்பவ இடத்திற்கும் கடலாடி மருத்துவமனைக்கும் இடையே 21 கி.மீ இருக்கும். சம்பவம் முடிந்தவுடன் அங்கிருந்து நான் ஆட்டோவில் மருத்துவமனைக்கு வந்தேன். ஆட்டோவில் வருவதற்கு சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாகும். என்னை கடலாடி மருத்துவமனையில் மருத்துவர் அடிதடியா என்று மட்டும் தான் கேட்டார். நான் ஆமாம் சார் தாக்கினார்கள் என்று தான் சொன்னேன். யார் தாக்கினார்களோ என்றோ எதனால் தாக்கினார்கள் என்றோ எப்போது தாக்கினார்கள் என்றோ குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை. நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமணையில் மேல்சிகிச்சைக்காக மதியம் 12.30 மணியளவில் சிகிச்சைக்காக சென்றேன். எனக்கு மூன்று நான்று நாட்களுக்கு பிறகுதான் சம்பவத்தால் ஏற்பட்ட மயக்கம் தெளிந்தது. நான் சுயநினைவில்லாமல் மூன்று நாட்கள் இருந்தேன். நான் 12.30 மணியளவில் சிகிச்சைக்கு சென்றவுடன் மதியம் 1 மணிக்கெல்லாம் போலீசார் அங்கு வந்துவிட்டனர். நான் அப்போது நடந்த சம்பவங்கள் அனைத்தும் வாக்குமூலமாக நான்தான் சொன்னேன். அதை எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் போட்டேன். நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் நான்கு நாட்களுக்கு மேலாக சிகிச்சையில் இருந்தேன். வழக்கு சம்பவம் நடைபெற்ற அன்று தான் என்னை போலீசார் விசாரித்தார்கள். அதன்

பின்பு என்னை போலீசார் விசாரிக்கவில்லை. உங்களது அண்ணன் அற்புதராஜீன் மீது எதிரிகள் வழக்கு நடைபெற்றது என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது. உங்களது ஊரில் ஊராட்சி மன்ற தேர்தலில் நீங்கள் ஒரு பிரிவாகவும் எதிரிகள் ஒரு பிரிவாகவும் செயல்பட்டீர்கள் என்றால் சரிதான். எனது புகாரில் எதிரிகள் யார்யார் என்ன ஆயுதங்கள் வைத்து உடலின் எந்த பகுதிகளில் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ஊராட்சி மன்ற தேர்தலின் முன்பகையை மனதில் வைத்துக்கொண்டு உங்களது அண்ணன் அற்புதராஜ் தூண்டுதலின்பேரில் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது தற்செயலாக ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகளின் மீது பொய்யாக புகாரினை தந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.